# தமிழர் சிந்தனை மரபில் தெய்வங்களும் மெய்யியலும்

**முனைவர் நா. ரேணுகா**
**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**
**பாத்திமா கல்லூரி, மதுரை. nrenuka042@gmail.com**

47

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத் தமிழர் வரலாற்றை, வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து காணுவதே ஏற்புடையது. தொல்தமிழரின் வாழ்க்கை இனக்குழு வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தது. நிலம் சார்ந்து வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டனர். அதனாலே இயற்கையோடு இணைந்த வாழ்வியலாக விளங்கியது. தொல்தமிழரின் சடங்குகள், நம்பிக்கைகள், சமயங்கள், வழிபாடுகள் அவர்தம் மெய்யியல் அறிவைப் பறைசாற்றுகின்றன. தெளிந்த சிந்தனையோடு வாழ்க்கையை அணுகினர் என்பதை அகழ்வாய்வுகளும் இலக்கண, இலக்கியங்களும் உணர்த்துகின்றன. ஆதி கிரேக்க மெய்யியல் கோட்பாடுகளுக்குக் குறைவில்லாதது தமிழரின் மெய்யியல் சிந்தனைகள் எனலாம். பழந்தமிழரின் தொல்சமயச் சிந்தனை இயற்கை வழிபாடு, இறந்தோர் வழிபாடு, நடுகல் வழிபாடு எனக் கட்டமைக்கப்பட்டன. நிலம் சார்ந்து தெய்வங்களை அமைத்துக் கொண்டும் வழிபட்டனர். இச்சூழலிலிருந்தே தமிழரின் மெய்யியல் உருவாகத் தொடங்கியது. இதனை ஆய்வது காலவளர்ச்சியின் ஒரு கூறாகும்.

**திறவுச்சொற்கள்**

தொல்தமிழர், தொல்சமயம், கொற்றவை, நடுகல் வழிபாடு, மெய்யியல்

**முன்னுரை**

மெய்யியல், மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் ஆய்வு செய்வதாக அமைகிறது. அது எல்லாவற்றையும் ஆய்வுக்குட்படுத்தி, அதன் உண்மைத்தன்மையை வெளிக்கொண்டு வரும் இயலாக விளங்குகிறது. மெய்யியல் என்னும் சொல் நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சொல் எனவும், அது கிரேக்கச் சொல்லான Philosophia என்கிற சொல்லில் இருந்து வந்ததொன்றாகும் எனவும் குறிப்பிடுவர். கிரேக்க மெய்யியல் வரலாற்றிற்கு முன்பே கீழைநாடான இந்தியாவில் மெய்யியல் வரலாறு தொடங்கி விட்டது. மெய்யியல் என்ற சொல்லிற்கான வேர்ச்சொல்லும் பொருளும் தமிழில் தான் காணப்படுகிறது. மற்றைய இந்திய மொழிகளில் காணக்கிடைக்கவில்லை. இந்நிலையில்,

- தமிழரின் தொல்சமயம் குறித்த சிந்தனைகளை ஆராய்தல்
- பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களினூடாகப் பழந்தமிழரின் மெய்யியலைக் கண்டடைதல்.
- திணை குறித்த சிந்தனை முன்வைக்கும் கருத்தை ஆராய்தல்.

முதலான கருத்தாக்கங்கள் வழிப் பண்டைத் தமிழ் மக்களின் மெய்யியல் கொள்கைகளை

இனங்காண்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**தொல்தமிழரின் சமயம்**

இலக்கிய மரபிற்கு முற்பட்ட தமிழ்ச்சமூகம் வாய்மொழி மரபுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. மக்களின் வாழ்வியலைத் தொல்லியல் அகழ்வாய்வுகள் வழியும் பின்னர் எழுந்த இலக்கியத் தரவுகளின் வழியும் கண்டடைய முடிகிறது. தொல்தமிழரின் தெய்வங்கள் நம்பிக்கைகளின்பாற் உருவாக்கப்பட்டதையும் அதனூடாக, சடங்குகள் முன்னெடுக்கப்பட்டதையும் ஆய்வது காலத்தின் தேவையாக உள்ளது. தொல்தமிழரின் சமயம் குறித்தும் வழிபாட்டு முறைகள் குறித்தும் சமகாலத்தில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக, வைதீக, ஆகம சமயங்கள் கால்கொள்வதற்கு முன்பே, இனக்குழுக்களாக வாழ்ந்த மக்கள் தமக்குரிய தெய்வங்களாக இயற்கையையும் தம் முன்னோர்களையும் அமைத்து வழிபட்டனர் என்பது பெறப்படுகிறது. மேலும் தொல்தமிழர் ஓர் இறைக் கோட்பாட்டைப் பின்பற்றவில்லை என்பதும் அறியமுடிகிறது.

**1. கொற்றவை**

கொற்றவை, பழந்தமிழ் மக்கள் வழிபட்ட தெய்வங்களுள் வெற்றியின் அடையாளமாகத் திகழ்ந்தவள். சிந்துவெளி நாகரித்தை ஆய்வு செய்த மார்ஷல் அவர்கள் இலக்கியங்களுக்கு முற்பட்ட காலத்திலே மக்களின் வழிபடும் தெய்வமாக கொற்றவை விளங்கினாள் என்கிறார்.

**"பழந்தமிழரது தலையாய தெய்வம் பெண் தெய்வமே என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியங்கள் பலவற்றில் கொற்றவை வழிபாட்டுமுறை கூறப்படுகின்றது. அச்சம் பொருந்திய பண்பையுடைய கொற்றவையை வெறியாட்டு முறையினால் பழந்தமிழர் வழிபட்டனர். பழந்தமிழர் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் வரைவிலக்கணமும் விளக்கமும் கொடுக்கும் தொல்காப்பியமும், கொற்றவைநிலை என்னும் தலைப்பில் கொற்றவைக்குப் பலிகொடுத்து வணங்குதலைக் குறிப்பிடுகின்றது."** (கலாநிதி க. கைலாசபதி: 1999: 8)

என்ற கூற்று எண்ணத்தக்கது. மேலும் தமிழ்ச்சமூகம் தாய்வழிச் சமூகமாக இருந்ததைச் சுட்டுகிறது.

**2. நடுகல் வழிபாடு**

இறந்தோரின் உயிரை (ஆவியை) ஓரிடத்தில் நிலைநிறுத்துவதற்கும், அவர்தம் வீரத்தைப் போற்றுவதற்கும் உறுதியான கல்லை நிறுத்தி வழிபட்டனர். நடுகல் வழிபாடு என்பது போரில் வீரமரணம் அடைந்த வீரனுக்கு நடப்படுவது என்ற கருத்தாக்கம் பிற்காலத்தில் நிறுவப்பட்டது. தொல்குடிகள் இனக்குழு தலைவன் இறந்தாலோ, கொடூரமான முறையில் இறந்தாலோ அவர்களுக்கும் நடுகல் வைத்தனர். இன்றைய அகழ்வாய்வுகளின் வழி நமக்குக் கிடைக்கும் பெருங்கல் வளைவு புதைக்குழிகளும், ஈமக்குழிகளும், பதுக்கு என்னும் கற்குவியல்களும் இதனை மெய்ப்பிக்கின்றன.

போர்வீரனுக்கு மட்டுமின்றி கொடூரமான முறையில் இறந்தோருக்கு எழுப்பப்படும் நினைவுச் சின்னங்கள் மானுடவியலார் கருத்துடன் ஒத்துப் போகக்கூடியது என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன். "பதுக்கு", "பதுக்கை" என்றழைக்கப்படும் கற்குவியல்கள் இத்தன்மையன என்பதை இலக்கியச் சான்றுகளின் வழி விளக்குகிறார். இப் பதுக்கைகளுக்கு நெல், மயிற்பீலி, மலர்கள் முதலியவற்றைத்

தூவி வழிபட்டனர். பலியடுதல் முதலான நிகழ்வுகளும் இருந்த செய்தியை எடுத்துரைக்கிறார். தொல்காப்பியர் குறிப்பிடும் நடுகல் வழிபாட்டிற்கும் முற்பட்ட நிலையாகக் காட்சியளிக்கிறது.

தொல்காப்பியர் தம் நூலில் நடுகல் வழிபாட்டை எடுத்துரைத்துள்ளார். போரில் இறந்த வீரனுக்கு அவனது நினைவாக அமைக்கப்படும் கல்லைத் தேர்ந்தெடுத்து, ஓரிடத்தில் நட்டு, வழிபடும் தொடர் செயல்பாட்டை,

**"காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்**
**சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தலென்று**
**இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்**
**சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே" (தொல். பொருள். 63)**

என்று விளக்குகிறார். பண்பட்ட நாகரிகத்தின் வழிபாடாகத் தோற்றமளிக்கிறது. மாங்குடி மருதனார் தம் பாடலொன்றில் நடுகல் வழிபாடு ஒன்றே முதன்மையான தெய்வ வழிபாடு உரைக்கிறார். வீரப் போரிட்டு மாண்ட வீரனைத் தெய்வமாக எண்ணி, நெல்லைத் தூவி வழிபட்டனர் என்று கூறி, வழிபடும் தன்மை பெற்ற தெய்வம் வேறில்லை என்றும் கூறுவது கவனத்திற்குரியது.

**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலக்கி**
**ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்ததெனக்**
**கல்லே பரவி னல்லது**
**நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே." (புறம். 268)**

என்ற பாடலடிகளின் கருத்து நடுகல் வழிபாட்டின் சிறப்பை உணர்த்துகிறது.

**பழந்தமிழர் மெய்யியல் சிந்தனை**

தமிழர் மெய்யியல் தொடக்கத்தில் பொருள் முதல் வாதம் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இம்மெய்யியலைக் கோட்பாட்டைத் தமிழரின் திணை சார்ந்த வாழ்வில் மரபிலிருந்து காணத்தொடங்கினர்.

தமிழரின் வாழ்வியல் இயற்கையோடு பிணைந்த வாழ்வியலைக் கொண்டது. அவர்தம் சிந்தனையும் அதன்பாற்பட்டதாகவே விளங்கியது. அந்தந்த நிலங்களின் பண்புகள், வாழ்வியல் சூழல், வாழ்வியல் முறைகள் ஆகியற்றிலிருந்தே பெறப்பட்டதை அக்காலத்து எழுந்த இலக்கண, இலக்கிய நூல்கள் உணர்த்துகின்றன. தொல்காப்பியம், இறையனார் களவியல் ஆகிய மரபிலக்கண நூல்களில் இதனைப் பரக்கக் காணலாம். சங்க இலக்கியத்திலும் இத்தகைய வாழ்க்கை நெறியையும் சிந்தனையையும் காணஇயல்கிறது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகையாக வகுத்த இலக்கண நூலார், கருப்பொருளில் நிலத்தையும் பொழுதையும் அமைத்தனர். நிலத்தைக் களமாகக் கொண்டே ஓரறிவுடைய உயிர் முதல் ஆறறிவுடைய உயிர்கள் வரை தோன்றும் என்ற உண்மையை உணர்ந்ததாலே முதற்பொருளில் நிலத்தை வைத்தனர்.

பழந்தமிழர் தம் வழிபாட்டையும் இயற்கையோடு இணைத்திருந்தனர். நிலம் சார்ந்த தெய்வங்களை வகுத்து வழிபட்டனர். தத்தம் நிலத்திற்குரிய தெய்வங்களை அமைத்துக் கொண்டனர். அச்சூழலில் வழிபாடானது, தருக்கமுறையிலோ அல்லது ஆகம விதிகளுக்கோ உட்படாதிருந்தது

என்பது கவனத்திற்குரியது. இதனைத் தொல்காப்பியம் பொருளதிகாரச் சூத்திரங்களின் வழி அறிய முடிகிறது. தொல்காப்பியர் கருப்பொருளைக் கூறுமிடத்து,

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல்.பொருள்.20)**

தெய்வத்தை முதலில் எடுத்துக்கூறி, அந்தந்த நிலத்திற்குரிய உணவு, விலங்கு, மரம், பறவை, இசை, தொழில், யாழ் முதலானவற்றைப் பட்டியலிட்டுச் செல்கிறார். நானிலப் பாகுபாட்டை எடுத்துரைக்கும் தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்குரிய தெய்வங்களை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன்மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." (தொல்.பொருள்.5)**

என்ற சூத்திரத்தில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இத்தெய்வங்களோடு, நிலம் வகுக்காது கொற்றவை போன்ற இன்னபிற தெய்வங்களையும் தெய்வ வழிபாட்டையும் காட்டுகிறார். வெறியாடல், நடுகல் வழிபாட்டு முறையையும் தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் கொற்றவைக்கு நிலம் சுட்டப்படுவதைக் கண்ணுறலாம். பழந்தமிழர் வகுத்த ஐந்நிலங்களில் குறிஞ்சியும் பாலையும் இனக்குழுக்களாக அமைந்தமையும் அந்நிலத்திற்குரிய தெய்வங்களாக முருகனும் கொற்றவையும் வகுத்திருப்பதையும் எண்ணவேண்டும். மேலும் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான பாடல்கள் இத்திணை சார்ந்தவை என்பதையும் உள்வாங்கி ஆய்வுநிகழ்த்தப்படவேண்டும்.

**திணை குறித்த சிந்தனை**

தொல்காப்பியம் மக்கள் வாழ்ந்த நிலத்தின் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு நான்கு நிலங்களாகப் பகுத்துக் காட்டுகிறார். ஒவ்வொரு நிலத்திற்கும் முதல், கரு, உரி எனும் முப்பொருள்களைச் சுட்டுகிறார். திணை சார்ந்து பகுத்து இலக்கணமும் இலக்கியமும் படைத்த சமூகம் தமிழ்ச்சமூகமே ஆகும். இச்சூழலில் தான், சங்க இலக்கியத்தைத் திணை இலக்கியம் என்று குறிப்பர். திணை என்பதை நிலமாகப் பகுத்துக் கண்டபோது, திணையை ஒழுக்கம் என்றரைக்கிறார் இறையனார் களவியலுரைக்காரர். இதனை,

**"இனி ஒழுக்கத்தினைத் திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது என்னை, விளக்காகிய சுடர் இருந்த இடமே விளக்கு எனப்பட்டது போல என்பது இனி, ஒரு சாரார் ஒழுக்கத்தினையும் திணை என்ப, நிலத்தினையும் திணை என்ப. ஆகலானன்றே, "அன்பினைந் திணை" என்றது,"** (இறையனார். உரை: 1938: ப.19)

என்ற கூற்று எண்ணத்தக்கது. இவ்விடத்து, பண்டைத் தமிழரின் திணை என்னும் கருத்தாக்கம் விரிகிறது.

**தொகுப்புரை**

- தொல்தமிழரின் சமய முறையானது இயற்கை வழிபாடாகவும், முன்னோர் வழிபாடாகவும் அமைந்திருந்தன. உருவம் என்பதற்கு முதன்மையளிக்கவில்லை என்பதை அறியமுடிகிறது.
- இலக்கியங்களுக்கு முற்பட்ட தமிழ்ச்சமூகத்தின் தொல்சமயம் இறந்தோர் வழிபாடாக விளங்கியதைத் தொல்லியல் அகழ்வாய்வுகளும் இலக்கியங்களும் உணர்த்துகின்றன.
- இயற்கை வழிபாடு என்பதும் முன்னோர் வழிபாட்டின் நீட்சியாகத் தான் இருக்கிறது என்ற கருத்தும் ஆய்வாளரிடையே நிலவி வருகிறது.
- வெறியாட்டு, மலர், நெல் முதலான பொருட்களைத் தூவி வழிபடுதல், பலியிடுதல் முதலான வழிபாட்டு முறைகள் தமிழரின் வழக்கத்திலிருந்தன.
- இனக்குழுக்களாக வாழ்ந்த தமிழரின் வழிபடும் தெய்வங்களாக கொற்றவையும் வேலனும் இருந்தனர்.
- தொல்காப்பியம் முதற்கொண்டு எழுந்த பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்கள் நிலம் சார்ந்த தெய்வங்களையும் கொற்றவை, நடுகல் முதலான இன்னபிற தெய்வங்களையும் எடுத்துரைக்கின்றன.

**துணைநின்ற நூல்கள்**


1. -------------------, களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் மூலமும் நக்கீரனார் உரையும், கா.ர.கோவிந்தராஜ முதலியார், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.ஆ.), பவானந்தர் கழகம், சென்னை, 1939.
2. --------------------, தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் முதற்பகுதி, பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை (பதி.), முல்லை நிலையம், சென்னை,1995.
3. கலாநிதி க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்பிஷர்ஸ், சென்னை,1999.
4. கனகசபை சிவானந்த மூர்த்தி, கந்தசாமி அன்ரன்டயஸ்(ஆசி.), மெய்யியல் ஓர் அறிமுகம் 1, அம்பாள் வெளியீட்டகம், புத்தூர், 1998
5. ஆ. சிவசுப்பிரமணியன், பண்டைத் தமிழ்ச சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2021.
6. சி.மௌனகுரு, பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2015.